164

அர்ச். அந்தோனியார் துதி

தரையுறு புரையற வருபர வைசூசாண்

14 JUL 1928

இஃது

பாதுமாபதியின் சுடரொளியாகிய
அர்ச். அந்தோனியாரின் பக்தியை முன்னிட்டு குன்னூர்
பாதுகாவலராகிய

# அர்ச். அந்தோனியாரின்

துணங்கறற் றினத்தின்போது
நீலகிரி, உதகமண்டலம்
சித்திரகவி ஸ்ரீமான் V. M. பொன்னுசாமிப் பிள்ளை
அவர்களின் மாணவரும் குன்னூர் நிவாசராகிய
அமுர்தகவி C. M. A. அந்தோனி குருஸ்
என்பவரால் இயற்றி ஷை அர்ச்சியசிஷ்டவரின் ஆலயத்தின்
முன் சில நேயர்களால் பாடி
அறங்கேற்றிய

# மாற்றம், மலரால், போற்றிக் குலாவுந் தெரியல்

17-6-1928

சென்னை
"[illegible] [illegible]ன்" அச்சுக்கூடத்தில்
[illegible]ப்பெற்றது
[illegible]8

ΟΕ6:3417
N28
175567

# மதிப்புரை

---

## வசனப் பிரபந்தம்

மரியாயி துணை

அன்பே மல்கிய வந்தோனி குருசே,

பெரிது மெனைக் கோரி வரவிடுத்தத் தூது கரங்கிட்ட
சுகப்பூர்வகமான சேதியறிந் தானந்தித்தேன், க்ஷேமம்.
அங்ஙனமே யவனுந்தனின் வாம மக்கள் மனையொடு
சுற்றமும், க்ஷேமமாக சுகித்திட வானகக் கோமானின்
னடி கோரியே வேண்டுதும்,
“ கற்றதனா லாயப் பயனென் சொல்வாலறிவா
னற்றா டொழா அ ரெனில்” என்ற முதுமொழி தழுவி,
அருந்தவனாகு மந்தோனியார்மீது நன்காக்கிய நின்னிருந்
தமிழ் மாலையைக் கண் டெனதுள்ளத்தி லென்றுமிலா
பெருமகிழ் கொண்டேன் கவியலங்காரப் பெருமையென்
னென்றுறைவது வாணர் கரந்தாங்கு மாணிக்கமாமிதுவே
என வுவமானங் கூறக் கல்விப்பொருளிற் சிறந்த
செல்வப் பொருளில்லை யென்பதை நன்குணர்ந்து—
தமிழ் சுமந்தப் புகழ்பெருக, சதுர்கவியு மெளிதாய்ந்துத்
தழைக்கு மான்றோர்—தமையடுத்துத் தகுமுறையே
கலை பயின்றுக் கற்றதற்கு சான்றாய்வான விமலனருங்
கழற்கனியாய்ப் பாவியற்றி நலங்காணும் வித்தைவிட்டு
நமக்கிணையா ரெனக்கருதும் வெறும் புலவர் போலின்றி
நலமே சார்ந்து ஒழுகுவதோடு வுளத்திடங் கோரித்
தொழுதிடு மர்ச்சயர் துணை யிருந்தென்றும் நலந்தர வாக்கிய
நயமொடு தெளிந்த வனுத்த விலக்கண மணியென
விளங்க முதிர்சுவை பாலும் முக்கனிரசமும் மதுரத்
துயர்ந்த வாசநற்றேனும் ஒன்றாக் கலந்து ஒப்பற
மினிமை நன்றளித்தன்ன நறும்புனற் போக்காய்
எடுத்தார் கரமு மிசைத்தார் வாயும் மடுத்தார் செவியு
மனமு மினிக்க சொல்லெல்லா மமிர்தஞ் சொறிதரப்புதுக்கும்

வல்லமை யுடைத்த வாணனே யுனக்கினி அமிர்தக்கவி
யெனு மழகபிதானம் சமஸ்த விதத்துந்
தருந் தருந் தருமே.

இங்ஙனம்,
ஆன்றோர்க்கடிமை
தங்கசாமிப் பிள்ளை,
ஆசிர்.

இதில்
வெண்பா
கலிவிருத்தம்
கட்டளைக் கலித்துறை
அறசீர் விருத்தம்
ஆசிரியப்பா
இவை ஐந்து செய்யுட்களடங்கி
யுள்ளன.

# சிறப்புப்பாயிரம்

இஃது

தஞ்சைமாநகர வித்வான் 'சித்திரக்கவி'

ஸ்ரீமான் M. அடைக்கலசாமி புலவரவர்க ளியற்றிய

## நேரிசை யாசிரியப்பா

அலைகட லுடுத்த நிலவுல கடுத்த
அல்வினை யகற்றும் எல்லென மிளிரும்
அளவரு நலமுறு வலசுர ரிறையாம்
அமல னருளிய சமமகல் சரத

அருமறை யுரனூரத் திருவெலாம் பொதுளிய
அங்குடி யிற்பிறந் திங்குயர் குணமெலாம்
அமைவுற விளங்கி யிமைய ரிறைஞ்சும்
அத்தனி னருட்கொடு வித்தகக் கலைபல
அகங்கொள வோர்ந்திச் செகவின் பெலாநிலை

அற்றன வென்றதற் பற்றறுத் துயர்ந்தோன்
அறமிளி ரிருந்தவ ருறையுளை நயந்தோன்
அருண்மறை நலத்தினை யிருண்மலி யுளத்தினர்
அறிந்துய வுணர்த்திச் சிறந்துயர் நவம்பல
அங்கங் கியற்றினோன் பங்க மகற்றினோன்

அலகையின் மயலறுத் திலகிய பெற்றியோன்
அங்கடன் மீன்கட் கிங்கிதஞ் சொற்றவன்
அரியநா வழிவுறுப் பெருமையிங் குற்றவன்
அலகிலா நவங்களா லுலகெலாம் பணிசெய
அவிருமெஞ் ஞானி சவிமலி நிதானி

அருட்பிர தானி தெருட்கொளுந் தியானி
அத்தமிக் கார்ந்த சுத்தன்அந் தோனி
அடிமலர்க் கணிசெய நெடிதொளி ரருந்தமிழ்
அங்கவி யலங்க னன்குற வியற்றினன்
அன்னவ னியாரெனிற் பண்ணுவங் கேண்மின் !

அந்தரத் துலவுங் கந்தரத் துயரும்
அஞ்சிக ரங்களும் விஞ்சையர் வியக்கும்
அணிகிளர் 'பதாகையார் மணிமா டங்களும்

அருநறு வருந்திப் பிரமா மிழற்றும்
அலர்மலி யெழிலா நலந்திகழ் பொழில்களும்
அஞ்சுகங் களித்த வொண்சினைத் தாளம்
அரிட்டமென் றயிர்த்து வரிச்சிறை விகங்கம்
அடைகிடங் தேங்குந் தடங்களும் பாங்காய்
அங்கங் கமைந்துல கெங்கணும் புகழுறாஉம்
அருநகர் குன்னூர் உறைபவ னுரிய
அன்பரு ளூக்கம் பண்புறு நோக்கம்
அத்தமாக் கொண்டோன் மெத்தகை விண்டோன்
அறிஞர்ப் புராஅவி யுரியநற் கலைகள்
அறிந்தசொற் றிறத்தினன் சிறந்தநல் லறத்தினன்
அரியநந் தமிழ்க்கலைக் குரிய
அந்தோனிக் குருவெனும் விந்தைநா வலனே !

---

# சாற்றுக் கவிகள்

---

இஃது

திருமயிலைச் செந்தோம் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

ஸ்ரீமான் ம. செல்வநாத முதலியார் கூறியது

## எண்சீராசிரிய விருத்தங்கள்

(1) வண்டினங்க ளிசைமுரலும் பொழிற்குன் றாரில்
வளரருள்பெய் பாதுகா வலனென் றோங்கும்
ஆண்டர்பிரான் றனைமகவாய் மலர் காத்தில்
ஆர்வமுட னேந்தவரு னுற்ற பெம்மான்
விண்டவழு மந்தோனி முனிவன் றன்மேல்
வியன்பத்திச் சுவைபெருகுந் தொடையலர்கத்
தண்டமிழின் றுறைபலகற் றுயர்விற் பன்னன்
சற்குணனந் தோனிகுரு செனும்பே ருற்றோன்

(2) தார்மலியுஞ் சித்ரகவி வி. எம். பொன்னு
சாமி யெனு மாயுயன்ற னகமகிழ்ந்து
பேர்மலியு மமிர்தகவி யென்னு நாமம்
பேருலகி லிசைபெருக வழங்கப் பெற்றோன்
நார்மலியுந் தமிழ்ப்பனுவ லியற்று கின்ற
நற்றறிமை யுற்றறிஞர் புகழ நின்றோன்
சீர்மலியு மாற்றமலராற் போற்றிக் குலாவுந்தூய
தெரியலெனும் பாமாலை யுஞற்றி னானல்

(3) தவமணியா மந்தோனி முனிவன் மீது
சாற்றியவிப் பாமாலை யதனை நோக்கில்
உவமையிலா மெய்ம்மறையின் பொருளு ணர்த்தும்
உத்தமவே தியர்முனிவர் கவிவல் லோர்கள்
கவனமுட னுய்த்துணர்ந்தே யிறும்பூ தெய்திக்
கனிந்துகுது கலமடைவ ரென்னி லிந்த
அவனியில்மற் றெவரதன்சீர் முற்று நாடி
அறைதரவல் லுநராவ ரறிகி லேமால்!

---

இஃது

கோலார் தங்கவயல்

ஸ்ரீமான் K. A. E. சிங்காரம் பிள்ளை கூறிய

## அறுசீர் விருத்தம்

துதிமேவு தோத்திரப்பா துகடீர்த்த தவமுனி யென்பான் பதுவை
பதியான அந்தோனி யமன்றுள் பேழையகம் பெய்வான் கொண்டு
பதித்திட்ட பாமாலை அமுதென்கோ தேனென்கோ பகர்வார்
[உண்டோ
மதித்திட்ட அமிர்தகவி அந்தோனிக் குருஸ்நாமம் மகிழ்வா மன்றே.

---

இஃது

இரங்கூன் A. B. M. Union Hall High School

தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

ஸ்ரீமான் பி. வி. இராமதாஸ் நாவலரவர்கள் கூறிய

## அறுசீர் விருத்தம்

பாதுகா வலன்பதுவை யந்தோனி குருமணிச்செம்
பாதம் போற்றுந்
தீதிற்பா மாலையொன்று மூவுலகும் பரிமளிக்கச்
செய்து தந்தான்
ஓதரிய சித்ரகவிப் பொன்னுஸ்வா மிக்கோன்பா
லோர்ந்து ணர்ந்த
போதமிகு மமிர்தகவி யந்தோனி குருவென்னும்
புகழுள் ளானே.

---

இரங்கூன் மகா மதுரகவிப் புலவர்

ஸ்ரீமான் அ. ந. சபாலமூர்த்திப் பிள்ளையவர்கள் கூறியது

## நேரிசை வெண்பா

கற்றுணர்ந்த சித்ர கவிபொன்னு சாமியருட்
பற்றியவந் தோனிகுரூஸ் பாடினன்...முற்றுசுவை
மூர்த்தியந் தோனி முளரியந் தாள்போற்றுங்
கீர்த்தி மிகுங்கீர்த் தனம்.

இரங்கூன் ஆயுர்வேத மஹா பண்டித சிரோமணி
ஸ்ரீமான் ஐ. சின்னப்பா பிள்ளையவர்கள் கூறிய

## வெண்பா

பதுவையந் தோணியர்தம் பாதமல ராசி
ருதவுவா ரென்றுறுதி யோர்ந்து...மதுரமுள்ள
பாமாலை நன்றாகப் பாடினனந் தோனிகுரூஸ்
ஆமாமென் றேற்கவகி லம்.

---

இரங்கூன் பண்டிதர்
ஸ்ரீமான் ஜெகநாத முதலியார் கூறிய

## நேரிசை வெண்பா

அந்தோனி யாரிணைக்கென் றாக்கினன் பாமாலை
அந்தோனிக் ரூஸென்னு மன்பனருட்...சிந்தையுடன்
பாடித் துதிப்போர் பலனனைத்துந் தாம்பெறுவர்
நீடி தழைத்துநிலத் தே.

---

இஃது
செந்தமிழ்பாநு திருமயிலை
பா. முனிஸ்வாமிப் பாவலரவர்கள் கூறிய

## அறுசீர் விருத்தம்

சித்திரமாங் கவிபாடும் ஸ்ரீபொன்னு சாமியிடந் தெளிந்த நல்லான்
வித்தைமிகு மந்தோனி குருஸமிர்த கவிநாமன் விளங்க யார்க்கும்
பத்திவரப் பாடுதொறுஞ் சுவைததும்ப வுயர்மாலை பதுவை யார்க்குச்
சித்தமிகக் களிதூங்கச் செய்தளித்துக் கீர்த்தியுற்றான் ஜெக மீதம்மா.

---

இஃது
தஞ்சைமாநகர் வித்வானும், சபாப் பிரசங்கியுமாகிய
சித்திரக்கவி ஸ்ரீமான் M. அடைக்கலசாமிப் புலவரவர்களின்
பிரதம மாணவரும் திரிசிரபுரம் அர்ச். அடைக்கல நாயகியின்
பக்த பால்ய பஜனை நூலாசிரியருமாகிய
திரு ம. சூ. மரியானந்தம் அவர்கள் கூறிய

## அறுசீர் விருத்தம்

சிந்தமிழும் புகழ்ச்சேசு பாற்கரத்தி லேந்திநலஞ் சிறந்த ஞானி
அந்தமிழுக் காவரங்கொள் அந்தோனி மாமுனிவ னடிக்கன் பாகச்

செந்தமிழி னலரிய கவியலங்க லியற்றிமதி திகழு மேலோர்
முந்தமிழிஃ தெனவுவப்ப அந்தோனிக் குருசென்போன் முடித்தா
[னன்றே.

---

இஃது

தஞ்சைமாநகர் வித்வானும், சபாப் பிரசங்கியுமா யொளிரும்
சித்திரக்கவி ஸ்ரீமான் M. அடைக்கலசாமிப் புலவரவர்களின்
மாணவருள் ஒருவரும், திரிசிரபுர நகராண்மைக்கழக பாடசாலை
(Municipal School) ஆசிரியருமாகிய
ம-ா-ா-ஸ்ரீ M. A. சூசைமாணிக்கம் உபாத்தியாயர் கூறிய

## எண்சீர் விருத்தம்

அருண்மலியு மமலபா னளிமிக் குன்றிங்
கரியதவ முஞற்றிநவம் புரிந்த மேலோன்
இருண்மலியு மலகைகுழூஉ விரியச் செற்றே
இருத்தலத்திற் சத்யமறை யோங்கச் செய்தோன்
தெருண்மலியு மந்தோனி முனிதண் டாட்குச்
செந்தமிழாற் கவிமாலை சிறப்பச் சொற்றுன்
பொருண்மலியு மருங்கலைக ளுணர்ந்தோர் வாணர்
புகன்றிடுநல் அந்தோனிக் குருசென்போனே.

---

இஃது

பெங்களூர் தண்டு மிறைக்கவி கோளரியும், மதுரக்கவி புலவராகிய
ஸ்ரீமான் P. ஜான் அந்தோனிப் பிள்ளை யவர்களின்
மாணவரும், பொது விஷயப் பிரசங்கியும்,
தற்காலம் செங்கற்சூளை நிவாசியுமாகிய
ஸ்ரீமான் A. L. A. தேய்வசகாயம் பிள்ளை கூறிய

## விருத்தம்

சீர்வளரு முலகமெல்லாம் கீர்த்திக்கொண்ட
சிங்கார ரத்னப்பீடம்
பேர்கொண்ட அந்தோனியார்மீது குன்னூர்வாழ்
பிரபல அமிர்தக் கவியோன்
ஆர்கொண்ட அந்தோனிக்குருசு மாசொகுசாய்
அல்லவருந் தோத்தரிக்க
ஏர்கொண்ட நன்நடையாய் மாற்றமலர் குலாவுநூல்
இயம்பிட்டான் விருந்திட்டானே.

---

இஃது
பெங்களூர் புது சீமோன் சேரியில் வசிக்கும் குவலையானந்த
விலக்கண கோர்வை சாலைத் தமிழ் சங்க வித்வான்
ச. ம. சவரியப்ப தாசரால் கூறிய

## பன்னிருசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

கவிவலன் மானடியைக் கர்லமு வழுவாதோன்
கற்றவர் வாயொழுகும் மதுவோன்
கன்னிமரித் தாயினியக் கழலடி யனுதினம்
கவலையிற் றியங்கு தியானன்
புவியுளோர்க்கு சங்கீர்த மாவினிய தொன்றேற்ற
புன்னறிவில் கியான மதுளோன்
பொன்னரிய முத்துப் பவளமுடன் நவமணிகளொளிப்
போன்ற வித மாகத்தானே
தவிரில்லா அமிர்தகவி அந்தோனிக் குரூஸ்தான்
தகைமாற்ற மலர்போற்றிக் குலாவும் பாவை
தக்கவிதமாக நவத் தாளங்களினிய மிர்தமாகத்
தகுந்தப் படியே யமைத்து
சுவிசேடக் கிறீஸ்துவர்கள் கையாட நன்னுதவி
சுபமதாய்ப் பொழிந்து தீர்த்தான்
சுகுணனிவன் மாபெரிய கஷ்டங் கொண்டானெனவே
சூரக்கவி வாணருக்கு மகிழத்தானே.

---

இஃது
பெங்களூர் குவலையானந்த விலக்கண கோர்வை சாலைத் தமிழ்
சங்க வித்வான் ஸ்ரீமான் ச. ம. சவரியப்ப தாசரவர்களின்
மாணவரிலொருவரும், கோத்தர்கிரிபெல் மவுண்ட் வாசியுமாகிய
K. சவரியப்ப நாவலரால் கூறிய

## எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

பரிமளம் மணக்கும் லிஸ்போன்நகர் பட்டணவாசியான
பாரெல்லாம் மதிக்கும் பேரோன் நிபுணபரமண்ட சொந்தகியான
உரியரோ சுமடுத்தீன் உண்மையின் புதல்வனார் உற்றவந்தோனியார்
[மேல்
உபகார வமிர்த கவியந்தோனி குரூஸ்தான் உலகோருக் கவிழ்த
[மான

உரிகொண்ட மாற்றமலரால் போற்றிக்குலாவும் உண்மையொடு கீதை
[சொன்னன்
உத்தமர்கள் வாசித்து சபாசெனமெச்சிட ஊடுருவ மனதுதானே.

---

இஃது
பெங்களூர் செங்கற் சூளையின்கண் வாசியும்
டிராமாக் கம்பெனிகளின் மானேஜரும்
ஆசிரிய குளக விருத்தம் பாடும் அருள்கவியும்
டிராமா கம்பெனிகளில் கீர்த்திப் பெற்றவருமாகிய
ஸ்ரீமான் சண்முகம் முதலியார் மாணாக்கரிலொருவருமாகிய
M. ஜோசேப்பு பிள்ளை கூறிய

## ஆசிரிய விருத்தம்

மணிவளரும் நீலகிரிக் குன்னூர்தனிலே மாருத வுதித்த சிங்கம்
மறைநூல்கள் காவியம் இதிகாச புராணமுதல் மங்காதறிந்த வங்கம்
துணிவுள்ள சித்ரகவி மலைமாற்று சுழிகுளம் தூய்மையாயறிந்த ரங்கம்
துகடில்லா வவரிடமிலக் கணமிலக்கியம் துப்புறவறிந்த சிலாக்யன்
அணிவளர் அமிர்தகவி C. M. A. அந்தோனிகுரூஸ் அன்னவர்பேர்
[கொண்டதான
அலங்கார வந்தோனிமாதவன் சேவடியை அஞ்சலித்துப் போற்றி
[செய்து
பணிவளர் மாற்றமலர் போற்றிக்குலாவும் பருதிக்கு நிகரானதாய்
பரிமளம் மணக்கின்றவன் சொல்லால் கீர்த்தனம் பகர்ந்திட்டான்
[விருந்திட்டானே.

---

இஃது
பெங்களூர் இம்மானுவேல் திருவடி சபாப் பிரசங்கியும்
வழுச்சொல் எடுத்துக்காட்டும் குடாரியுமாகிய
ஸ்ரீமான் தங்கப்பிரகாசம் அவர்கள் கூறிய

## திருதரா விருத்தம்

நீரின்மேற் குமிழியுலக மென்றுன்னி நீக்கியேத் தவவுடைத்தரித்தும்
பாரின்மே நின்றுக் கன்னிகையாசைப் பசாசுனுலகை ஜெயித்துப்
பேரின்ப வாழ்வையடைந்த முனிவர்மீது பிரபலபந்தம் பேசியேச்
சீரின்பங்கொண்ட அந்தோனிக்குரூஸ் செம்மல்பேர் நிலைத்திடவே
விலைக்கொடுத்துப் பாவாங்கி வித்துவப்பேர் பொய்யர்
தலையெடுத்துக் காட்டா தோட்டத்தக்கபடி யமிர்தம் பொங்க

குலேகுலேயா விருத்தம் வெண்பா குவலேயம் நிறையவெணணி
நிலேமாற்ற மலரால் போற்றிக்குலாவும் நிந்தியானந்தமான
பேரின்பக் கவிதனே யுரைத்திட்டான் பெட்புயர் வித்வரத்னமானத்
தாரிவளர் V. M. சித்ரகவி பொன்னுசாமி தானவன் சபாசெனவே
வீரிய வலகையது கிடுகிடென கண்பிதுங்கி வினியேதுவென கலக்கலக்க
கூரிய அந்தோனி நாமங்கண்டு நடுங்கிட கொடுத்திட்டான் கொடுத்
[திட்டானே.

---

பெங்களூர் புது சீமோன் புரமிலகும் குவலேயானந்த விளக்கணக்
கோர்வைசாலேத் தமிழ்ச் சங்க வித்வான்
ஸ்ரீமான் ச. ம. சவரியப்ப தாசர் அவர்களின் மாணவரும்
சபாப்பிரசங்கியுமாகிய ஸ்ரீமான் P. D. அந்தோனி தாசரவர்கள் கூறிய

## விருத்தம்

கங்கை சூழுலகெலாம் படைத்தழித் தளிக்கவல்ல
கருணேநிறை பரமனருள் மிகவும் பூண்டு
எங்கும்புகழ் கோடியற்புத மென்றிரு நாமம் பூண்ட
எழில் பதுவா பதிவா சனனே
சங்கைசேர் அந்தோனி மாமுனிமேற் பக்திபூண்டு
சார்த்திடும் பூமாலே வாடு மன்றோ ?
மங்களஞ்சேர் மாற்ற மலரால் போற்றிக்குலாவும்
மணி தெரியல் பாமாலே சாற்றினனுல்
கணிபரவும் நீலகிரி சிகரம் வாழ்வோன்
கர்த்தனடி யனுதினமு மறவா நேசன்
அணிபரவும் நன்னூலும் தொன்னூற் காரிகை
அணியிலக் கணமோ டொல் காப்பியம்
மணிபரவும் சத்யவேதா க்ம சங்ஷேபங்களும்
மற்று மிலக் கண விலக்கியமும்
துணிபரவும் பொன்னம்பல வாசான்பாற் கேட்டோர்ந்த
துளிரமிர்த கவி யந்தோனிகுரூஸ் வல்லோனே.

---

இஃது
பெங்களூர் நிவாசரும் சபாப் பிரசங்கியுமாகிய
ஸ்ரீமான் P. D. அந்தோனி தாசரின் மாணவரிலொருவராகிய
கனம் J. R. மாணிக்கம் பிள்ளே கூறிய

## விருத்தம்

சீர்கொண்ட பதுவாபதி நகரெழுந்த துய்யன்
ஜெகம்புகழ மச்சங்கட் குபதேசித்த மெய்யன்

வார்கொண்ட அந்தோனி மாதவன் திருவருட்கு
மாற்ற மலரால் போற்றிக் குலாவும்
நேர்கொண்ட தெரியல்பா மாலை பாடியே
நீ னிலத்தி லவராசீர் பெற்றுன்
தார்கொண்ட அமிர்தகவி யந்தோனி குருஸ்
தாரணியி லிவனும மோங் கிடவே.

---

இஃது

அர்ச். ஜெனிக்கிலாஸ் விலாசம், கோதுகப்த்தான் விலாசம், தேக்கிலம்மாள் விலாசம், பார்பாரம்மன் நாடகம், விலாசம், தோபியாஸ் சபா, பார்பாரம்மன் சபா, பிலோமனம்மாள் சபா, தேக்கிலம்மாள் சபா, செசீலியம்மாள் சபா, சூசானம்மாள் சபா, ஏஸ்த்தர் சாலேமியாள் சபா, லேடிஸ் கூக்ரி, பாபு அந்தோனி கூக்ரி, ஆரோக்கியமாதாவின் பூர்வதெரிசனம், டோர்னல்லி அர்ச். அந்தோனியார் பூர்வோத்திரம் இவைகளைச் செய்தவரும் மைசூர் சாம் ராஜேந்திரர் மீது மரண ஒப்பாரிக் கண்ணிகள் சொல்லிப் பரிசுபெற்றவருமாகிய ச. ம. சவரியப்ப தாசரின் புதல்வரும் ஆசு. மதுர. சித்திர. வித்தாரக் கவிகளுக்கு உறை புதல்வரும் பம்பாயின்கண் கதாப் பிரசங்கியுமாகிய ச. ம. ச. ஆசீர்வாதம் அவர்களால் கூறிய,

## ஆசிரிய விருத்தம்

பூமலர்த்து முனிவர்களு மிருடிகளும் ரிஷிகளுடன்
புகழ் பெற்று வளரும் நாடு
பூரித்து மேகமது வந்து ராஞ்சிப் பனிபொழியும்
பூதலத் தொதுவர் முட் குறவரோடு
ஆமலைச் செழிக்கின்ற நீலகிரி குன்னூர்தனில் மருவும்
அணி கொண்ட வித்வ ரத்னம்
அமிர்தகவி அந்தோனி குருசுதாசன் சுத்தனை அமலவருள்
ஆண்டவனைக் கரத்தில் கொண்ட
தாமகுண அந்தோனியார்மீது கீதையது தேனெழுக மாறு
தக்கப் பேர் ருசி யருந்த
தகுந்தபடி கற்பனை யலங்கார விலக்கண வழுவில்லாது
தாரணி யோர்க் குதவியாக
சேமகல வுலகமே கையேந்தி துதித்திடவருள் சுருக்க
செந் தமிழாலே சொன்னன்
செப்பவும் போகுமோ வுலகோர்க்கோர் தீபமாய்த்
செரிந்திட்டா னவினல் மொழிந் திட்டானே.

---

இஃது
சோலாப்பூர் ரெயில்வே டெம்பர் டேக்கரும் பூனாவில் வசித்துக்
காலஞ்சென்ற வேதநாயகம் வித்வான் அவர்களின்
மாணவரிலொருவருமாகிய
S. L. ஆரோக்கியசாமி தாசர் கூறிய

## ஆசிரிய விருத்தம்

நீர்பூத்த நெருப்பதனை யூதியதின் நிகரொளியால் நிச்சந்துஷ்டி
[யடைந்தவாறு
பேர்பூத்த மாற்ற மலர்போற்றுங் கீதையை அந்தோனி குரூஸ் பெரு
[மையாய் அந்தோனியார்மேல்
பார்பூத்த புலவர்கள் சபாசென வாழ்த்திட பைரவி தோடிபலராக
[மோடு
சீர்பூத்த நடையுடனே செப்பியிந்தான் சிறப்புர இவனுமொரு புல
[வன்தானே.

---

## காப்பு

---

ஈராசிடைப் பெற்றுவந்த ஒழுகிசை வெண்பா

ஞானந் துதைந் தொளிர்செய் நன்மறையின் றானாகி
வானிடத்தும் *வானிடமே வாய்ப்பப்பெற்—றானந்த
முற்றவந் தோனிநல மோங்குகழற் காக்கும்பா
முற்றாக வெந்தையருண் முன்!

---

அர்ச். தேவமாதா துதி

மூன் மூடுதே நேரிசை வெண்பா

மாட்சிவரத் திற்சிறந்து மாக்கட்‡தீத் தீர்ப்பவெழுந்
தாட்சிசெயு மம்மணிநி னந்தாளைத்—தாட்சியுடன்
சென்னிமிசைக் கொண்டு செழுந்தவவந் தோனிபுகழ்
பன்னவெனி னாகணிருப் பாய்!

வேறு

தூங்கிசை வெண்பா

அனைநின் றிருத்தா ளருளே நனிநின்
றினியப் பதுவை யெழுந்தே—வினைதீர்
மகிபனந் தோனியை வந்தித் தொழுகத்
தகையளித் தாள்வாய் ததி!

---

அர்ச். சூசையப்பர் துதி

ஒற்றில்லா நேரிசை வெண்பா

மாதவ நீடு மகாமுனிதா னாடியுள
வேத மொழிய வெணியடியே—னோதுகவி
சீரா யமைய திருவிழி பாரெனது
நேராறு சூசை வளனே!

---

* வானிடம்-மோட்சம்.  ‡ தீ-தீமை.

## வேறு

### நேரிசை வெண்பா

சூசை யெனுமுனியே துய்யமரி பத்தாவே
காசினியோற் கென்னாளும் காவலனே—பாசமுடன்
பா துநகர் வாசியின்மேல் பாபாடி விட்டனதால்
தீதொழித்து நற்றிரமே சேர்

---

## அர்ச். செபஸ்தியார் துதி

### நேரிசை வெண்பா

சத்யமறை யோர்பணியுஞ் சாதுரிய போதகனே
சுத்தசெபஸ்த் யாரே துகடவிர்மெய்—பத்தனையெங்
நாளு—மிரங்தெ னலிவகற்ற வென்றுன து
தாளுற் றனனலமே தா!

---



மணியொளி தவமுனி திருமல ரடிசரண்.

அர்ச். அந்தோனியார் துதி

## நேரிசை வெண்பா

வாரிதிமச் சங்கள் வணங்கவுப தேசிக்கப்
பேரறிவைக் கொண்ட பெருந்தகையே—பாரிலெமைக்
காக்க விதுதருணங் கண்பார்த் தெமதிடரைத்
தீர்க்கத் திருவருளே செய்

## பாடல்

இராகம்—“மரியநாயகி யீன்றெடுத்த” என்னும் பாட்டிசை

பல்லவி

சரணமென நினதுதிருத் தாளிணையே பணிய
தாளிணையே பணிய வந்தோம் சந்தந்தோனிமுனியே (சரண)

சரணங்கள்

(1) கருணை மலியுந்தேவ கர்த்தனைக் கரங்கொண்டு
கர்த்தனைக் கரங்கொண்டு—எமைக்—காக்கவேண்டுமென்று
கதிவிளைக்கு நிதிமலர்த்தாள் கண்டுவந்தோ மின்று (சரண)

(2) மதிநீடு மெஞ்ஞான மறையினுப தேசா
மறையினுப தேசா புவி வணங்கும்ப்ரகாசா
மக்களெங்கள் துக்கந்தீர மன்றாடினோம் நேசா (சரண)

(3) அன்னத்தின் பின்னமதை அறிந்தும் புசித்தவா
அறிந்து புசித்தவா...தீய...அலகை நசித்தவா
அருளூறுமெம் பரமனரு ளுறையுள் வசித்தவா (சரண)

(4) துஷ்டகுணமுள்ள வேத துரோகிகள் சம்மாரா
துரோகிகள் சம்மாராநலந்—துலக்கிடுகெம்பீரா
தொல்லுலகோ ரல்லல்தனைத் தொலைத்திடு மொய்யாரா (சரண)

(5) அந்தோனிக் குருசின் தமிழ்க் காதரவாயிருந்து
ஆதரவாயிருந்து—நின—தகமகிழச் சிறந்து
அருள்வாய்வரம் நலநிறையு மமுதவாயைத் திரந்து (சரண)

விருத்தியானுபிராசம் பெற்றுவந்த

## கட்டளைக் கலித்துறை

வானம் மலியும் வலவர் மகிழ வரத்துயர்ந்து
தானந் தவமே தரணியிற் சாலவுந் தங்குதற்காய்
ஞானம் நடத்திடு நன்மறை நாட்ட நலமெனவே
மோன முதிர்ந்திடு முத்தமன் முன்னடி முத்திசெய்வாம்

இராகம் – நாட்டைக் குறிஞ்சி　　　　　　　　　தாளம் – ரூபகம்

சுஜன ஜீவனு என்னும் பாட்டிசை

பல்லவி

பாரு மையனே...ஞானம்...படருந்துய்யனே...வா வா
பண்பார் மெய்யனே

அநுபல்லவி

பாரினிலுன் கழல் பற்றியே தொழுது
பணிந்திடுமெம் பிணி நீக்கிநற் குணந்தாவிப்பொழுது (நாளும்)

சரணங்கள்

(1) பதுவைநகர் தனிலுதித்த பாதுகா வலனே
சதிசெய்திடு மலகைகளைச் சங்கரிக்கும் வலனே
கதிநீ தானையா...எமைக்...காத்தருள் மெய்யா
நிதமெளியோர் குறைநீங்கிட நின்னருளைச் செய்யாய் (நாளும்)

(2) புரவிசிரம் வணங்கச்செய்த பூசித நேசா
திரமாய்ச் சத்யமறை மல்கிடச்செய்த வுல்லாசா
கருணைமெஞ்ஞானி உயர் காட்சிசேர் தியானி
வரமேதர நினைவேண்டினேம் வாலசந் தந்தோனி (நாளும்)

(3) வாரிதி மச்சங்கள் மகிழு முபதேசா
பாரின்துயர் போக்கும் வல்ல–பரன் விசுவாசா
கோரிக்கை தேவா–திரு–குண முதிர்பூவா
நேராகவெங் குறையறவே–நீ தயைசெய் சீவா (நாளும்)

(4) கருணைத் திறத்திலுயர்ந்த கனமிளிர் நூலா
குருக்கள்மடமே சிறந்த கோதில்லா சீலா
சுரர்மகிழ்வோனே–என்றுந்–துலங்குஞ் சீமானே
கருணாகரப் பரனைத் திருக்கரத் தணைந்தோனே (நாளும்)

(5) நேசதந்தையின் தோஷந்தவிர்த்த நேர்மை மிக்கோனே
பேசும் அந்தோனிக்குருஸ் வணங்கிடும் பீடார்தக்கோனே
தேசார்திண்ணியா–எங்குந்–திகழுங் கண்ணியா
தாசரெமக் கிரங்கியருள் தருவாய் புண்ணியா (நாளும்)

**கலி நிலைத்துறை**

சத்துரு சோகின் சதியற நூறிச் சமர்துடைத்த
வித்தக ஞான சத்துவ போதா மிளிருநின்றுள்
பத்தியாய் வேண்டு மெமக்கா விரங்கிப் பரிந்துதயை
வைத்துநீ யாள்வது நின்கட னன்றோ வரமருளே!

---

இராகம் — இந்துஸ்தான் தாளம் — ஆதி

உலகம் பலவிதம் நெஞ்சே என்னும் பாட்டிசை

பல்லவி

வரமே தருவாய் முனிநாதா நின்மலர்தாள்
வந்தித்தோம் போதா (வரமே)

அநுபல்லவி

சுரரில் நீரொருவ ரல்லோ வெமக்காய்
சுதனே வேண்டய்யனே (வரமே)

சரணங்கள்

சத்ய வேதபோதகனே - மெஞ்ஞானந் தங்கும் சாதகனே
உத்தம குணமுதிர்ந்தகோனே - உலக பாது காவலனே (வரமே)

(2)

கருணை மலியும் பிரகாசா பரம—கர்த்தன் விசுவாசா
தருணம் வந்தாளாய் நேசா சர்ஜனர் போற்றுமுல்லாசா (வரமே)

(3)

வேத நலஞ்சே ரொய்யாரா விண்ணொளி முடியலங்காரா
பாதுவை நகரின் சிங்காரா பட்சம் வைத்ததாளுங் கெம்பீரா (வரமே)

(4)

வாலசந் யாசத்தின் துய்யா வந்துயிவ்வேளை—யாளையா
சீலத்தி லோங்கிய மெய்யா தேவனையேந்திய கையா (வரமே)

(5)

சந்தத முன்னருள் தேடி தாளிணை வேண்டுவோர்கோடி
அந்தோனிக் குருஸ் தமிழ்ப்பாடி அஞ்சலித்தோ முனைநாடி (வரமே)

## முன்முடுகு வெண்பா

சத்யமறை பத்திசெய்யுஞ் சத்வமிகு தத்வநிறை
வித்தகத்தி னுத்தமமார் மெய்தகையே—இத்தலத்தோர்
தீய மறமறவே தேவனையி றைஞ்சியரு
ணேய மிகுத்த நிதி!

---

இராகம் — பிலகிரி தாளம் — ரூபகம்

என்ன கேள்விமுறை என்னும் பாட்டிசை

பல்லவி

ஞான தேசிகா—இந்த
நாளே நின்றிருத் தாளை வேண்டினேங் கேளேயெம்முறை (ஞான)

சரணங்கள்

தானந் தவத்தி லுயர்ந்தப்ர காசா
தத்துவ மொய்த்திடும் பத்தியுல் லாசா
மோனகுண முதிர்ந்தோங்கும் சந் யாசா
முற்று நின்னருள் பற்று ரத்தினம் நத்துமெம்மையாள் (ஞான)

(2)

எண்ணில்லா நவங்க ளின்புறச் செய்தவா
ஏந்தல் லிஸ்போனுள்ள ஏக்கத்தைக் கொய்தவா
மண்ணினோர் துன்பற மாநலம் பெய்தவா
மாறுமெய்மறை தீரா வல்ல சிங்காரா வருட்செய் (ஞான)

(3)

தீதுபுரி கூளி தீங்கைமிதித் தோனே
சேயாய் மடுத்தின் குலத்திலுதித் தோனே
பாது காவலனைப் பண்பாய்கதித் தோனே
பாராய் நின்னருள் தாராய் தந்தெமைச் சீராய்க்காத்தருள் (ஞான)

(4)

நஞ்சிட்ட வன்னமென்று கண்டும் உண்டனே
நன்மையுறுஞ் சத்ய நற்போதம் விண்டனே
வஞ்சகமிகு வேதத் துரோகரை வென்றனே
வாகா நன்றுயர் யோகா வென்றிகொள் தியாகா தஞ்சமே (ஞான)

(5)

சீராரு நற்றவஞ் சேருமெய்ப் போதா
சேயன் அந்தோனிக் குரூஸ்சொலு நீதா
பாரோர் பணியும் பகர்பிரக் யாதா
பாலா நற்பரிபாலா தற்பரன் சீலா போற்றினேம் (ஞான)

## நேரிசை வெண்பா

வாலப்பெண் தன்னை வசப்படுத்திக் கொள்ளுதற்காக்
கோலமதைக் கொண்டபேய்க் கூட்டமொன்றை—ஞாலமிசை
யோட்டி நலமளித்த உத்தமனே மெய்த்திறமே
காட்டி யெமையென்றுங் கா

---

இராகம் – சேஞ்சுருட்டி தாளம்- ஆதி

தருமநாத புரத்தின் என்னும் பாட்டிசை

(1)

தேசமரும் லிஸ்போனின் வாசன்மடுத்தீன் குலத்
தெழுந்த மெஞ்ஞானமுனியே சந்தந்தோனியே திகழும் அறமார்
[கனியே—பூவில்

நீதறிந்து சத்ய வேதமுணர்த்தியே மேதகைநத்திய நீததவத்தியவ்
சீர்த்தியுற் றோங்குமுனியே சந்தந்தோனியே - தீனர்க்கிரங்கு
[மணியே (தேச)

(2)

பாசமுள்ள குருக்கள் வாசமடத்திற் சென்று
பத்தியைக் கொண்டமுனியே - சந்தந்தோனியே - பாரில்துலங்கு
[மணியே - தே
பத்தினியாம் மரி—யுத்தமியாளரு—ளித் தலத்தேயுற—மெத்தநலத்தினில்
பாங்கா யுயர்ந்தமுனியே - சந்தந்தோனியே - பாலர்க்கருள்வாய்
[நனியே (தேச)

(3)

புல்லறிவோரின் அன்னந் தன்னில் நஞ்சினைக்கண்டு
புகழாய்ப் புசித்தமுனியே - சந்தந்தோனியே - பொற்பார் அற்புத
[மணியே - மன்னன்
புரவிசிரம் வணங்கத்—திறமுறு தேவநற்—கருணையை கரங்கொண்டு
[திருமறைநீடிடப்
புதுமை புரிந்தமுனியே - சந்தந்தோனியே - புன்மையகற்றுமினியே
(தேச)

(4)

உன்னரும் போதனையை யூரிலுள்ளோர் கேளாதால்
உள்ளங் கவன்றமுனியெ - சந்தந்தோனியே - உயர்ந்தவரத்தின்
[அணியே - ஞான
உச்சித நிறைதிரு மெய்ச்சமயத்தினைபட்சமனத்தோடு மச்சங்களுக்
[கன்று
உபதேசஞ் செய்தமுனியே - சந்தந்தோனியே - உவந்தே தீர்ப்பா
[யெம்பிணியே (தேச)

(5)

அஞ்ஞானத்தை யொழித்து மெஞ்ஞானத்தை விளக்க
ஆசை மிக்குற்றமுனியே - சந்தந்தோனியே - அடல்மிகு சுடர்மணியே
[- கொடும்
அல்லல் விளைத்திடுந்—தொல்லை மிகுங்கடிவல்லமை நீக்கியேகொல்லு
[நல்லாயுத
மானவெற்றி சேர்முனியே...சந்தந்தோனியே...அன்பர்களிருக்குங்
[கனியே (தேச)

(6)

கோரமுடைய வேத விரோதிகள் அஞ்சுந்தீர
கோடரி யானமுனியே...சந்தந்தோனியே...குருவடிவானமணியே...
[பூவில்

கூறும் அந்தோனிக்குருஸ் சீரார்தமிழுக்கருள் நேராயுவந்தென்றுந்
[தாராயெனநின்பதம்
கொண்டாடி னேமேகனியே...சந்தந்தோனியே...குறையை யகற்று
[மணியே (தேச)

## நிரோட்டக நேரிசை வெண்பா

ஞானந் திகழ்ந்தே நனிசிறக்க நானிலத்தஞ்
ஞான நலிய நலனியற்றித் - தான
நிதியே நிறைத்த நிகரில்லாய் சேயர்
நிதியே யடையச் செய் நீ !

---

இராகம் – செஞ்சுருட்டி தாளம் - ஆதி

கண்ணிகள்

சத்திய திருமறை மதிக்குந் தீரா - உனை
நித்தமும் பணிந்தோமிப் புவிற் சீராய்
உத்தம மெஞ்ஞானத்தினற் சத்தியத்திலே யுயர்ந்து
பத்தியின் மிகுத்தொளிரும் வித்தக தேசிகாநிதம் (சத்தி)

(2)

வால சந்நியாசங்கொண்ட நற்போதா - தவ
சீலத்தில் புகழ்மலிந்த முனி நாதா
ஞாலத் தெவருந்துதிக்கு நூலனே நின்னருள் நேராய்
பாலரா மிவ்வடியோர்க்குச் சாலவேதரக் கண்பாராய் (சத்தி)

(3)

கர்த்தனின்றிருச் சிலுவைக் காத்தேந்தி-பெரும்
அற்புதம் பலப்பணித்த ஏகாந்தி
கற்புயரு முத்தமனே பொற்புடனெம் முன்னம் வாராய்
சற்பிரசாதனே வேண்டி யிப்புவியோர் குறை தீராய் (சத்தி)

(4)

சத்துருக்கள் தம்மை ஜெயித் தழித்தோனே-உயர்
பத்தியாம் நலத்தினையே தெளித்தோனே
சித்தியே மிகுத்தமரி பத்தியினை நித்தங்கொண்டு
மெய்த்தகைமை நத்துமுயர் தத்துவ முற்றனேபண்டு (சத்தி)

(5)

சுந்தரமுடி சூடிய வலங்காரா-பாடும்
அந்தோனிக் குருஸ் தமிழுக் குபகாரா
விந்தைநிறை மாதவனே இந்தவேளை வந்தே யாளாய்
சொந்தவருள் தந்தெமது சிந்தையுறுந் துயர்மீளாய் (சத்தி)

## வெண்பா

திருத்துவஜ மேந்தியமா தேசவுப தேச
குருவெனவே நல்வரத்தைக் கொண்ட-வருமுனியே
நின்று டுணையென்ன நேர்மையொடு போற்றுமெம்முன்
நின்று ளனுதினமு நேர்

---

இராகம் – அமீர் கல்யாணி தாளம் – ஆதி

பாற்கவடியானந்தம் என்னும் பாட்டிசை

பல்லவி

தீர்ப்பதுனது திருவடியருளே-தேசகுறை நேராய் சீராய் (தீ)

அநுபல்லவி

ஜெகந்துதி சிலா தீனர்த யாளா
புகழ்மலிந் தொளிர் கோலா புன்மையாற்ற வேண்டுமேலா
உனையல்லாது துணைவேறில்லை-தேசகுறை நேராய்சீராய் (தீ)

சரணங்கள்

அன்புயர் தீரா அலகை சங்காரா
நம்பினோர்க் குபகாரா நலமெய்த்திடு மெஞ்ஞான சிங்காரா
தேசகுறை நேராய் சீராய் (தீ)

(2)

தருணச காயா தவமலி தூயா
கருணைமிகுந்த நேயா கன்னி திருமரியின்ன விதேயா
தேசகுறை நேராய் சீராய் (தீ)

(3)

உன்னரும் வாக்யம் உணர்ந்தோர்மா பாக்யம்
அன்று கொண்டன்றோ யோக்கியம் அடைந்தார்பாரில்—புகழ்பெரும்
[சிலாக்கியம்
தேசகுறை நேராய் சீராய் (தீ)

(4)

சுத்தமா மணியே துலங்குநல் லணியே
நித்தமுன் றுட்பணியே நேர்ந்தோம்வந்தாள் ஞானக்கனியே
தேசகுறை நேராய் சீராய் (தீ)

(5)

கருணைப்ர தாபா கண்யநிஷ் கோபா
திருமாமறையின் தீபாதேடும் அந்தோனிக் குருஸ் புகழ்நிருபா
தேசகுறை நேராய் சீராய்

## கட்டளைக் கலித்துறை

சீராருசிதத் திருபர ணேக்கரஞ் சேர்த்தணைத்து
பாரோர்க் கருளைத் தருமா முனியாய்ப் பதுவைநகர்
நேரா யுதித்துத் தவத்தி னுயர நிகரறுநற்
பேரோங்கு மந்தோனி யாரடி—யைத்தினம் பேணுவமே

---

இராகம் – தேசிகப்பியாக் – (பாலாபிஷேக என்னுமிசை) – தாளம் – சாப்பு

பல்லவி

வால சந்தந்தோனி மாமுனியே யென்று
மாமலர்த் தாளைப் பணிந்தோம் நன்று

அநுபல்லவி

ஞாலத்தில் சில மிகுத்திடு மேலா
பாலரெங்கள் குறை தீரனு கூலா

(முடுகு) நத்திடு மித்தலப் பத்தியுல்லா சா
சித்தி யளித்திடும் உத்தம நேசா

(பல்லவியெடுப்பு) நாடினோர்க் காறுத லீந்திடும் சாதே
வாடிடு மேழையோர்க் கிரங்குமிப்போதே (வால)

(தொகையறு)

திருச்சிலுவை கரங்கொண்டு திகழ்நவஞ் செய்த தீரா
அருள்மறை நிலைக்க வுபதேசித்த வருட்கொள் கெம்பீரா

(முடுகு) படிமிசை நினதடி யவர்கருள் தாராய்
இடர்வில கிடப்பர னிடங்கேளாய் சீராய்

(பல்லவியெடுப்பு) பாக்கிய மெய்யருட் படருஞ்சி லாக்யா
வாக்கிய மெய்மறை வழுத்திய பாக்யா (வால)

(தொகையறு)

தீதுசெய் கூளியை ஜெயித்தழித்திட்டசீ மானே
பாதுநகர் மீதுசுடர் காட்டியநற் பண்பமருங் கோனே

(முடுகு) ஜெகத்தினிற் றிருமறை திகழு சிங்காரா
அகமகிழ் தூனதருள் தகையுடன் தாராய்

(பல்லவியெடுப்பு) தேசிக னென்னும் சந்யாசிநீ தானே
பாசமுடன் கழல் பணிந்தோம்பூ மானே (வால)

(தொகையறு)

தஞ்சமென்றுனை யண்டித் தாவுமிச் சேயரெம் மீது
நெஞ்சு மிரங்கியே நீயருள் செய்வாயிப் போது

(முடுகு) தவமதி னுயர்ந்த மெய்த்தகை விசுவாசா
புவனத்தோ ரனுதினம் புகழும்ப்ர காசா

(பல்லவியெடுப்பு) சந்ததம் அந்தோனிக் குருஸ் சொலும் நூலா
சிந்தை மகிழ்ந்தருள் செய்யனு கூலா (வால)

## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அற்புதமெஞ் ஞானியென நல்வரத்தை யடைந்தென்று மளவிலாத
தற்பரனைக் காமேந்தித் தாரணியோர்க்குபதேசஞ் சாற்றிச்சீரார்
பொற்புயருந் தவத்தோங்கி மேன்மையுற்றுத்துலங்கிய மெய்ப்புனித
[னுன
விற்பனவந் தோனிமுனி யிணையடியின்மலர்தூற்றி வேண்டியுய்வாம்

---

இராகம் – தோடி தாளம் ரூபகம்

பல்லவி

ஏழைக் கிரங்கு மையனே—எழில்மிகுத்த
இனிய வந்தோனி மெய்யனே

சரணங்கள்

தாளைப்பூ சிக்குமிந்த தாசரெம் மீதிரங்கி
ஆளுவதுன் கடனே அன்பார்ந்தமெஞ் ஞானவனே
அருளுறு முனதிரு மலர்நிகர் சேவடி
திருநல மளித்துநற் கருணைபுரிவாய் நாதா (ஏழை)

(2) தஞ்சமென் றுனைத்தேடித் தாவுமக் களைநாடி
வஞ்சம கற்றிக்கப்பாய் மாண்பா ரருளைவார்ப்பாய்
வளர்முடி துலங்கிடு மலங்கிர்த நேசா
பலமிடி களைத்தவிர்த் துயர்த்தும் சந்யாசா (ஏழை)

(3) சீல மடுத்தின்குலத் தெழுந்தபாசி லாக்கியா
பாலரெங்கள் குறைக்காய்ப் பரனைவேண்டுவாய் பாக்யா
பத்திமி குத்தமெய் நத்தும னத்தனே
நித்தமு மித்தலத் தோர்க்கருள் சுத்தனே (ஏழை)

(4) மாயஞ்செய் சோகின்பொல்லா மாருட்டந்தனை வென்று
நேயமாய்ச் சத்யவேதம் நீடச்செய்ததா லென்று
நினைவுட னுனதடி பணிந்திடத் துணிந்தோம்
கனிவுட னுயரிய கவிசொலி யணிந்தோம் (ஏழை)

(5) பண்பாயுனைத் தொழுது பாடும் அந்தோனிக்குருஸ்
செந்தமிழ்க் காசிர்தந்து தேறுத லீவாய்திரு.
தினகர ஞெளியமை யிணையறு தீரா
பணிசெயு மனுக்குலத் துணையாங் கெம்பீரா (ஏழை)

## வெண்பா

சீல மிகுத்த திருபாலனைக் கையேந்தி
ஞாலத் தவர்க்கு நலமளிக்கும்—வால
முனிசந்தந் தோனி முளரிமலர்ப் பாதந்
தனைவேண்டு வோமே ததி

இராகம் முருகனே கலியுகத்தில் முழுமுதற் கடவுள் (என்னும் பாட்டிசை)

பல்லவி

கருணையாய்க் கடவுளைத்திருக் கரமணிந்தவனே—மகிமேல்
கருணையாய்க் கடவுளைத்திருக் கரமணிந்தவனே

அநுபல்லவி

தருணமீ தாளநின்னடி நாளும் பணிந்தோம்
சத்திய மெய்ம்மறைப் பத்தி நிறைந்தவா
வித்தகா வுன்றிருச் சித்தமி ரங்குவாய் (கருணை)

சரணங்கள்

பாரோர் வினைதீர்க்கப் பாராய்-சீராய்-பாரோர்
பட்சமாய் நின்னையே உச்சித மாகவே
அர்ச்சனை செய்தனம் துர்ச்சதி போக்கவே (கருணை

(2) பாது நகருதித்த சாது-நீயே-பாது
பாலரெங்கள் குறை நாளும கற்றிட
சீல மிகுத்திடத் தாலகன் குற்றிட (கருணை)

(3) அய்யா தினந்துதித்தோ மெய்யா-ஆளாய்-அய்யா
அல்லலெனும் பெருந் தொல்லையை நீக்கியே
நல்லருள் தந்திடும் வள்ளலை நோக்கியே (கருணை)

(4) அன்பா யுனைப்பணியும் நண்பன்-நாளும்-அன்பாய்
அந்தோனிக் குருசின் செந்தமிழுக் கருள்
தந்திட வந்திடாய் விந்தை நிறைதிரு (கருணை)

## நேரிசை வெண்பா

தீரா வினையொழிக்குந் தீரா செறுநருறை
வீரா நினதடியை வேண்டிமக்கள்—நேராய்த்
துதிபாடி வந்தோஞ் சுரரிறையே நேர்ந்தே
திதியளித் துன்னருட் செய்

இராகம் – சங்கராபரணம் தாளம் - ஆதி

கண்ணிகள்

ஐயா அந்தோனியென்னு மெய்யா
அடியோர்க் கருள் செய்யாய்

அடியோர்க் கருள் செய்யாய்
அருந்தவத்தின் துய்யா அமிர்தஞான-ஐயா

(2) பாது நகரில்வேத மோதிப்
பலுக செய்த சாது
பலுக செய்த சாது
பாலர்க்கிரங்கிப் போது நாடினோமுன்னை-ஐயா

(3) சீராயுன்மலர்த் தாளை நேராய்
சேவித்தோ மருள் கூராய்
சேவித்தோ மருள் கூராய்
செங்கரத்தாசி தராய் சந்ததம்பாராய்-ஐயா

(4) நேய மடுத்தின் தவச் சேயா
நீணிலத்தோரு பாயா
நீணிலத்தோரு பாயா
நிகரில்லாச காயா நித்தந்துதித்தோம்-ஐயா

(5) சீலா அந்தோனிக்குருஸ் நூலா
செல்வ மாருந்த யாளா
செல்வ மாருந்த யாளா
சித்தியளிக்கு மேலா திகழும்நீத-ஐயா

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருத்துவசங்கரமேந்தித் தேசமெங்கும் பலநவங்கள் செய்துஞான
வருண்மறையைப்போதித்து மெய்ப்பக்தி யூட்டியமா வையன்செய்ய
மருமலர்த்தாட்டிருவருளி னல்வரத்தைக் கொள்வதற்கே மகிழ்ந்
[தென்னாளும்
திரமுடனேகவிசாற்றித் தீவினைக ளகலவெனச் சேவிப்பாமே

---

**இராகம் — செஞ்சுருட்டி** **தாளம் — ரூபகம்**

பல்லவி

தவஞானி யெனுமந் தோனி
தாளிணைப் பணி வோமே-திரு-தவ

அநுபல்லவி

அவனியோர் கட்குல் லாசன்-பெரு
அல்லல் தவிர்க்கும்ப்ர காசன்-திரு-தவ

சரணங்கள்

வேத விரோதியர் சிங்கம்-பூவில்
விலையற்ற மாசறு தங்கம்
பாதுவை மாநகர் துங்கம்-ஞான
பாக்கியங் கொண்டநல் லங்கம்-திரு-தவ

175567

(2) அஞ்சலிப் போர்க்கனு கூலன்-என்றும்
ஆதரவீயும் வி சாலன்
இஞ்சுட ரொளிநிறை சீலன்-உயர்
செம்மை குன்றுபரி பாலன்-திரு-தவ

(3) கர்த்தனை யேந்துசெங் கரத்தோன்-பாது
காவலனு முயர் வரத்தோன்
சத்துருவை ஜயித் தொழித்தோன்-நலந்
தவறிய மதத்தைப் பழித்தோன்-திரு-தவ

(4) விந்தை நிறைந்திடு ஞானி-நன்மை
மிக்குற் றுளிரும்ப்ர தானி
கந்தமலர் வாச மேனி-கொண்டு
கர்த்தனை துதிக்குந்தி யானி-திரு-தவ

(5) வந்தித்தால் அந்தோனி பாதம்-என்றும்
வாராது நந்தமக் கேதும்
அந்தோனிக் குருஸ்சங் கீதம்-கேட்டால்
ஆனந்தங் கொள்ளுவீர் நீதம்-திரு-தவ

---

## வாழி

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியயமக விருத்தம்

வானலந்தோய் வானமரர் பணிந்தடுப்ப வரம்பிலரு மருத்வ மாஞ்செங்
கோனடத்துங் கோனமது பரமனிணை மலரடியுங் குவிமெய் ஞானப்
பானனவின் பானவமு தொழுகுவிழி கொடுவுலகம் பாவுத் தங்கி
யானந்ததா யானந்தா புகழ்கிளைத்த மரிமணியும் வணங்கா னுண்மை
மாதவத்து மாதவனே ரவிரொளிசெய் வளமுனியும் வைமா னண்டுங்
கோதறஙன் கோதரிய மறைநெறிநின் றருட்குவித்து குணுக்கி னுக்கஞ்
சாதுறத்த சாதுவெனப் பதுவைபதி விளங்குமகான் தண்டாட் போதும்
போதகத போதனருந் திருச்சபையும் பொலிந்தென்றும் வாழி மன்னே.

வேறு

### முதலுமீறு மடங்கி யுற்றநெடில் விருத்தம்

சந்தத மிழாபி மானத்தால் வானுலா சந்தரும்
சுந்தர வந்தோனி யப்பன்க டாட்சமாஞ் சுந்தரம்
முந்துற நூவிதை யச்சிட வன்பினு முந்தவு
வந்தவ ருங்குண நேயரும் வாழிநி வந்துமே
சுபம்! சுபம்!! சுபம்!!!

இப்புத்தகம் அச்சில் பதிக்க உதவிபுரிந்த நேயர்களின் நாமதேயமும் தொகைகளும்.

**C. Gabrial, Mostyn, Rs. 10; G. A. Arokiaswamy, Milentown, Rs 5; M. Milcass, Kirckot, Coonoor, Rs. 2-8;**

17—6—1928. Coonoor. *Composed by* C. M. A. ANTHONEY CRUS. Amirdakavi.

---

Printed at the "Satya Nesan" Press, Madras.—June 1928.

# “ சத்திய நேசன் ”

ஒரு புது மாதாந்தரச் செந்தமிழ்ப் பத்திரிகை

---

“ சத்திய நேசன் ” எனும் மாதாந்தரச் செந்தமிழ்ப் பத்திரிகை யொன்றை 1926ஆம் ஜனவரிமீ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இது கிறீஸ்துவர்களின் சமூகாபிவிருத்தியையும், பொது நலத்தையும், பொது அறிவு விருத்தியையும் கோரி ஆரம்பிக்கப்பட்டது. இதற்குக் கற்றறிந்த பெரியோர், வித்வான்கள் முதலாயினோர் விஷயதானம் செய்து வருகின்றார்கள். அரிய பெரிய விஷயங்கள் இதில் வெளிவருகின்றன. இது தமிழ்க் கிறீஸ்துவர்க்கேயன்றி, தண்டமிழ் மொழியில் ஆர்வங்கொண்டுள்ள எனையோர்க்கும் இன்பந் தரத்தக்கதாகும். தமிழபிமானிகள் ஒவ்வொருவரும் வாசித்துப் பயனடையக்கூடிய அரிய பத்திரிகை. இதனைப் பார்க்க விரும்புவோர் பின்கண்ட விலாசத்துக்கு எழுதிக் கொண்டால் மாதிரிப் பிரதி இனாமாக அனுப்பப்படும்.

வருஷ சந்தா தபாற்செலவு உட்பட

உள்நாடுகளுக்கு ரூபாய் 1. வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0

ஆயுள் சந்தா உள்நாட்டிற்கு ரூ. **30**. வெளிநாட்டிற்கு ரூ. **35**.

## எமது சொந்த பிரசுரங்கள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| அர்ச். தோமையார் சரித்திரம் ... | 1 | 0 | தனபாக்கியம் ... | 0 | 12 |
| அர்ச். அந்தோனியார் சரித்திரம் ... | 1 | 0 | சுசீலா ... | 0 | 6 |
| வேதானந்தம் ... | 1 | 0 | அர்ச். செசீலி சரித்திரம் | 0 | 6 |
| பாலசுந்தரம் ... | 1 | 0 | அர்ச். எகிப்துமரி சரித்திரம் ... | 0 | 6 |
| சத்தியநாதன் ... | 1 | 0 | அருள்மரி ... | 0 | 6 |
| ஆனந்தராயன் ... | 1 | 0 | ஜெயசீலி ... | 0 | 6 |
| மதிவீரன் ... | 0 | 14 | வெரோனிக்கா ... | 0 | 5 |
| ஞானானந்தன் ... | 0 | 11 | நவமணி ... | 0 | 5 |
| | | | செல்வியர் நியதி ... | 0 | 4 |

விவரமான கேட்லாக் இனாம்.

எமது விலாசம்:—**செல்வம் அண்டு கம்பெனி,**
480, சில்வர் தெரு, பரங்கிமலை.

Printed at the "Satya Nesan" Press, Madras.